# விருந்தோம்பல்

கலிலேயாவில் பெத்தானியா எனும் ஊர் இருந்தது. இந்த ஊரிலே மார்த்தா, மரியா எனும் சகோதரிகள் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு லாசரு எனும் சகோதரனும் இருந்தார்.

ஒரு நாள் இயேசு இந்தக் கிராமத்தினூடாக சென்றார்.

மரியாள் : மார்த்தா! மார்த்தா! அதோ இயேசு செல்கின்றார். நீ சொல்வது சரிதான்.

மார்த்தா : நாம் அவருடன் பேசுவோம். அவரை எமது வீட்டுக்கு வருமாறு அழைப்போம்.

மரியா : அவரது போதனைகளை என்னால் கேட்க முடியும்.

மார்த்தா : நான் அவருக்கு விரைவில் உணவுகளைத் தயாரித்துக் கொடுப்பேன். நாம் அவரை அழைப்போம்.

ஆண்டவரே! எங்கள் வீட்டுக்கு வாருங்கள்.

இயேசு அவர்களின் அழைப்பை ஏற்றுக் கொண்டார். ஆண்டவர் இயேசு இளைப்பாறுவதற்காக, பெத்தானியாவிலுள்ள இவ் வீட்டுக்கு அடிக்கடி செல்லுவது வழக்கம். அவர் வரும் வேளைகளில் மார்த்தாவும், மரியாவும் அவரை அன்புடன் உபசரித்து வந்தனர்.



நாமும் எமது அன்பானவர்களின் அழைப்பை மதித்து ஏற்றுக் கொள்வோம். அதே போன்று எமது விருந்தினர்களையும் அன்புடன் உபசரிப்போம்.

செயற்பாடு

1. நீர் மற்றவர்களுக்கு விருந்தோம்பல் செய்த சந்தர்ப்பம் ஒன்றை வகுப்பில் எல்லார் முன்னிலையிலும் கூறவும்.
2. இப்பாடத்தில் உமது மனதைக் கவர்ந்த பகுதியை சித்திரமாக வரைந்து காட்டவும்.